# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*1993 நவம்பர் 9, செவ்வாய்க்கிழமை*

## *ஐப்பசி 24, ஸ்ரீமுக - திருவள்ளுவர் ஆண்டு 2024*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற்கு கரிய செயல்"*

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்வதற்கரிய செயல்களைச் செய்து முடித்திட வேண்டும்.

## 1. இரங்கல் தீர்மானம்.

**திரு. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மறைவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறந்த மண்ணுக்கு பெருமை பல சேர்த்திட்ட திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம்.

அளப்பரும் தமிழ்ப் பெருந் தொண்டராக விளங்கி, நல்ல பண்பாட்டுத் தமிழை நாளும் வளர்த்து, தமிழகத்திலும், உலக நாடுகளிலும் ஆன்மீக நெறியின் சிறப்புகளைப் பெரு மழையாகப் பொழிந்து வந்த, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், தமது 87-வது வயதில் 7-1-1993 அன்று மறைவுற்ற துக்க செய்தி, தமிழகத்திற்கும், தமிழ் அன்பர்கள் அனைவருக்கும், ஆற்றொணாப் பெரும் துயரத்தை அளிப்பதாகும். அவர் ஈடும் எடுப்புமற்ற தமிழ்ப் பேரறிஞராய், சிறந்த இசை வல்லுநராய், அரிய பல நன்னெறிக் கதைகள் மூலம் இசைச் சொற்பொழிவாற்றும் கலைஞராய், திருப்பணிகள் பல புரிந்த சமயச் சீலராய், அறப் பணிகள் பலவற்றையும் செய்த அருஞ்செம்மலாய், எல்லாத் தரப்பு மக்களாலும் போற்றிப் பாராட்டி

வரவேற்கப்படும் சான்றோராய்த் திகழ்ந்தவர் ஆவார். அவரது இழப்பு தமிழ் உலகத்திற்கும், ஆன்மீக உலகத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் சென்ற 70 ஆண்டுக்காலமாகத் தன்னலம் கருதாமல் பொதுத் தொண்டாற்றி, பெரும் புகழ் கொண்ட பெருமான் ஆவார். அவர் மதிப்புறு டாக்டர், கலைமாமணி, இசைப் பேரறிஞர், தமிழ்க்கொண்டல் போன்ற பட்டங்கள் பல அளிக்கப்பெற்றுப் பாராட்டப் பட்டவர் ஆவார். அவர் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அன்னார் மறைவு குறித்து இச்சட்டமன்றப் பேரவை ஆழ்ந்த கவலையையும், மிகுந்த வருத்தத்தையும் கொள்வதோடு, அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் தன் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.'

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் இயற்கை எய்திய பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)*

*(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

## 2. அரசினர் தனித் தீர்மானங்கள்

### (அ) தமிழக அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையை உறுதி செய்திட இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கோரி வலியுறுத்துதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் போராடிப் பெற்றுத் தந்த பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான உரிமை, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களால் 50 சதவீதம் என உயர்த்தப்பட்டு, தற்போது தமிழகத்தில் மொத்த ஒதுக்கீடு 69 சதவீதம் என்றுள்ள தனிச் சிறப்புக்கு பங்கம் நேர்ந்துள்ள சோதனையிலிருந்து மீள்வதற்காக, 4-11-1993 அன்று தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவினையொட்டி, விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, சட்டமன்றப் பேரவையின் இந்தச் சிறப்புக் கூட்டத்தை இன்று கூட்டியுள்ள தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.